**மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் - 2017**

---

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதியினுள் காலாவதியாகும் போது மாத்திரமே காசு மற்றும் காசுக்குச் சமமானவையாக தகுதி பெறுகின்றது. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 19,082,110 நீண்ட கால முதலீட்டு மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இந் நடைமுறை முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது திருத்தம் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியவைகளில் அதிகரிப்பு ரூபா 6,906,266 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 6,930,751 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 834,485 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 19,046,962 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மஹாபொல மற்றும் புலமைப்பரிசில் செலவினங்கள் முறையே ரூபா 4,150,150 மற்றும் ரூபா 18,640,900 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலவினங்கள் முறையே ரூபா 4,910,000 மற்றும் ரூபா 17,897,100 ஆகக் காணப்பட்டமையால் மஹாபொல செலவினங்கள் ரூபா 759,850 ஆல் அதிகரித்தும் புலமைப்பரிசில் செலவினங்கள் ரூபா 743,800 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2017 நவம்பர் 30 இல் அலுவலகம், ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் என்பன ரூபா 14,427,810 தொகையாகவும் தளபாடங்கள் ரூபா 643,705 தொகையாகவும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் புதிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 245,828 தொகையான பெறுமானத்தேய்வு, பெறுமானத் தேய்வுக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு மீள்மதிப்பீட்டுச் சீராக்கல் கணக்குகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் சொத்துக்களிற்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் என்பன ரூபா 245,825 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) அலுவலகம், ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை சொத்துக்களிலிருந்து அகற்றும் நட்டம் ரூபா 1,251,448 செயற்பாட்டு செலவினமாக கருதப்பட்டு இலாபத்திலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டிய போதிலும் அந் நட்டம் மூலதன மானியக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிறுதி மூலதன மானிய மீதியும் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்திலுள்ள செயற்திட்ட வளவிற்கான மின்சார விநியோகத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,407,000 தொகை கட்டிட பெறுமதிகளிற்கு மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) தியகம தொழில்நுட்ப நிறுவகத்தின் மீளமைத்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 10,360,051 தொகையான செலவினங்கள் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 நிறுவகத்தினால் மற்றும் நிறுவகத்திற்கெதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

நிறுவகத்தினால் வெளிநிறுவனங்களுக்கு எதிராக ரூபா 05 மில்லியன் நட்டஈடு கோரி மொறட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கின் பிரதிவாதியினால் அந்த வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45(2)(1)(xv) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ஏதாவது பணமொன்று காணப்பட்ட போதிலும், சட்டரீதியாக முதலீடு செய்யக்கூடிய ஏதாவது பிணைகளில் முதலீடு செய்தல் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வங்கியொன்றில் நிலையான வைப்புப் பணமாக வைப்புச் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்

தொலைநோக்குக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Distance Education Modernization Programme) 2009 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 955,030 தொகை எந்தவொரு முதலீட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படாது தொழில்நுட்ப நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 42,448,648 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,494,368 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 44,943,016 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 16,254,000 ஆல் அதிகரித்த போதிலும் அதற்கு நேரொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 69,767,960 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 05 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3,510,686 பற்றாக்குறை மேலும் வீழ்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 42,448,648 ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 60,521,335 ஆன நிறுவனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 104,481,868 ஆக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியின் இரண்டாம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளில் 09 கல்விசார் துறைகளில் மாணவர்களின் சித்தியெய்தும் சராசரி சதவீதம் 83 ஆகக் காணப்பட்ட போதிலும் மின்னியல் (Electronic), கரையோரம் (Marine), பொலிமர் (Polymer), சிவில் (Civil), இயந்திரவியல் (Mechanical) மற்றும் புடைவை (Textile) ஆகிய துறைகளில் சித்தியெய்திய சதவீதம் முறையே 65, 72, 76, 76, 78 மற்றும் 79 ஆக காணப்பட்டன. அதன் பிரகாரம் அத் துறைகளில் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவிற்கான புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 09 வரையிலும் அக் கற்கைநெறிகளிற்காக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 100,000, ரூபா 100,000 மற்றும் ரூபா 1,000,000 தெகையான நிதியேற்பாடுகள் முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி ஒதுக்கீடுகளிலிருந்து பணமெதுவும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்திற்காக வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நிதியங்களை குறைவாகப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,096,878 பெறுமதியான 06 நிதியங்கள் அந்நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 09 ஆண்டுகள் தொடக்கம் 14 ஆண்டுகள் வரையான காலமாக எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் 111 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 38 ஆகவும் காணப்பட்டதனால் 73 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளியிலிருந்து தற்காலிக மற்றும் வேலை குறித்தொதுக்குதல் அடிப்படையில் 45 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் 28 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியினர் 156 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 76 ஆகவும் காணப்பட்டதனால் 80 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளியிலிருந்து தற்காலிக மற்றும் வேலை குறித்தொதுக்குதல் அடிப்படையில் 20 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் 60 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை. |
| (இ) | நிதிய முகாமைத்துவம் | நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடமான பதவிகளிற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |